# நரக விடுதலை பெற்றுத்தருபவை

المنجيّات من النّار

Moulavia M.Y. Maziyya B.A. (Hons)

## பஜ்ர் மற்றும் ஸுபருத் தொழுகைகள்:

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

சூரியன் உதயமாக முன்னருள்ள (ஸுபஹு) தொழுகையையும், அது மறைவதற்கு முன்னருள்ள (அஸர்) தொழுகையையும் தொழுது வருகின்ற எவரும் நரகம் செல்லமாட்டார்.

(நூல்:)

## ஜமாஅத் தொழுகையைப் பேணல்:

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

யார் 40 நாட்கள் முதல் தக்பீருடன் ஜமாஅத்துடன் தொழுது வருகின்றாரோ அவருக்கு 2 விடுதலைப்பத்திரங்கள் எழுதப்படுகின்றன. அவையாவன

A. நரகவிடுதலை
B. நயவஞ்சகத்திலிருந்து விடுதலை

நூல் : திர்மிதி

## ளுஹர் தொழுகைக்கு முன்னரும், பின்னரும் 4 ரகஅத்துக்கள் தொழுதல்:

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

யார் ளுஹர்த் தொழுகைக்கு முன்னரும் பின்னரும் 4 ரகஅத்துக்களைத் தொழுது வருகின்றாரோ அவரை அல்லாஹ் நரகத்திற்கு தடைசெய்து (ஹராமாக்கி) விடுகின்றான்.

(நூல்கள்: அஹ்மத், அபுதாவூத், திர்மிதி)

## அறப்போர் புரிதல்:

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

யாருடைய இரு பாதங்களும் அல்லாஹ்வுடைய பாதையில் போர் புரியச் சென்று புழுதி படிந்து விடுகின்றனவோ, அந்த இரண்டு பாதங்களும் நரகத்துக்கு தடைசெய்யப்பட்டுவிடுகின்றன.

(நூல்: திர்மிதி)

## யுத்த களத்தில் இறை நிராகரிப்பாளனைக் கொலை செய்தல்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒரு இறை மறுப்பாளரும், அவனைக் கொலை செய்த இறைவிசுவாசியும் நரகத்தில் ஒன்று சேரமாட்டார்.

(நூல்: முஸ்லிம்)

- **நோன்பு வைத்தல்.**

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
நோன்பு நரகத்திலிருந்து மனிதனைப் பாதுகாக்கின்ற கேடயமும், கோட்டையும் ஆகும்.
நூல்: நஸாஈ

- **முஃமினான அடிமைப் பெண்ணை விடுதலை செய்தல்**

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
யார் ஒரு முஃமினான அடிமைப் பெண்ணை விடுதலை செய்கிறாரோ அவள் அவருடைய நரக விடுதைக்குக் காரணமாவாள்.

(நூல்: நஸாஈ)

- **அல்லாஹ்வின் அச்சத்தினால் அழுதல்**

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
கரந்த பால் திரும்பவும் மடி புகாதது போன்று அல்லாஹ்வின் அச்சத்தினால் அழுத மனிதர் நரகம் நுழையமாட்டார்.

நூல்: திர்மிதி

- **அல்லாஹ்வின் பாதையில் காவல் காத்து விழித்திருந்த கண்கள்**

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
இரு கண்களை நரகம் தீண்டமாட்டா. ஒன்று அல்லாஹ்வின் அச்சத்தினால் அழுத கண். மற்றொன்று அல்லாஹ்வின் பாதையில் காவல் காத்து விழித்திருந்த கண்.
(நூல்:திர்மிதி)

- **உபரியான நோன்பு வைத்தல்**

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
ஒரு அடியான் அல்லாஹ்வுக்காக ஒரு நாள் நோன்பு வைத்தால், அதற்காக அல்லாஹ் அவனுடைய முகத்தை 70வருடத் தொலை தூரத்திற்கு நரகத்திலிருந்து தூரமாக்குகின்றான்.

(நூல்: புகாரி, முஸ்லிம்)

இது போன்று நரகிலிருந்து மனிதனைப் பாதுகாக்கக் கூடிய செயல்கள் இன்னும் அதிகமாக இருக்கின்றன.

அல்லாஹ் மிக அறிந்தவன்.